| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| திரு.சா.மார்ஸ்<br>முதன்மைக்கல்வி அலுவலர்,<br>முதன்மைக்கல்வி அலுவலகம்,<br>எழும்பூர், சென்னை-8. | அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்கள். |

**ந.க.எண்: 111/ ஆ6/ 2024 நாள்: 03.01.2024**

அய்யா/அம்மா,

| | | |
|---|---|---|
| பொருள் | : | தமிழ்நாடு பள்ளிக்கல்வி - உடற்கல்வி - 2023-2024 ஆம் ஆண்டுக்கான மாநில அளவிலான அனைத்து வயதுப் பிரிவு மாணவ, மாணவியருக்குமான புதிய விளையாட்டுப் போட்டி டேக்-வான்-டோ 08/01/24 முதல் 11/01/24 வரை சென்னையில் நடைபெறும் தகவல் தங்கள் மாவட்டத்திற்கு தெரிவிக்கக் கோருதல் - சார்பு. |
| பார்வை | 1. | தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள்.<br>ந.க.எண்: 34753/எம்/இ4/2023, நாள்:22/12/23 |
| | 2. | முதன்மை உடற்கல்வி ஆய்வாளரின் செயல்முறைகள்.<br>ந.க.எண்: 20250/CIPE/2023, நாள்:02/01/24 |

------------------

மேற்காண் பொருள் மற்றும் பார்வைகளின்படி, 2023-2024 ஆம் ஆண்டுக்கான குடியரசுதின/பாரதியார்தின மாநில அளவிலான புதிய விளையாட்டுப் போட்டி டேக்-வான்-டோ, சென்னை மாவட்டம் சார்பில் 08/01/24 முதல் 11/01/24 வரை நடத்துவதற்கு, மரியாதைக்குரிய தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநர் அவர்கள் ஆணை வழங்கியுள்ளார்கள். இப்போட்டி செம்மஞ்சேரி, ஜேப்பியார் பல்கலைக்கழகத்தில், மேற்குறித்த நாட்களில் நடைபெற உள்ளது. மாணவர்களுக்கான போட்டி 08/01/24 மற்றும் 09/01/24 ஆகிய நாட்களிலும் மாணவிகளுக்கான போட்டி 10/01/24 மற்றும் 11/01/24 ஆகிய நாட்களிலும் நடைபெற உள்ளது.

மேலும், மாநில அளவிலான நீச்சல் மற்றும் கடற்கரை கையுந்துபந்து போட்டிகள் 07/02/24 முதல் 10/02/24 வரை சென்னை மாவட்ட பள்ளிக் கல்வித் துறையால் நடத்தப்பட உள்ளது. இது தொடர்பான பிற தகவல் பின்னர் தெரிவிக்கப்படும்.மேலும், போட்டிக்கான அறிவுரைகள், வெளிமாவட்ட நடுவர்கள், பொறுப்பாசிரியர் விபரம் மற்றும் பேருந்து வழிகள், ஆகியவை இணைப்பில் வழங்கப்பட்டுள்ளது.

Scanned with OKEN Scanner

இத்தகவலை தங்கள் மாவட்டம் சார்ந்த பள்ளிகளுக்குத் தெரிவித்து அனுப்பி வைத்திடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இடம்: சென்னை,

நாள்:

முதன்மைக்கல்வி அலுவலர்,
சென்னை.

நகல்:

1. தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பலாகிறது.
2. முதன்மை உடற்கல்வி ஆய்வாளர்களுக்கு (ஆண்கள்/பெண்கள்) தகவலுக்காக அன்புடன் அனுப்பலாகிறது.
3. அனைத்து மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர்களுக்கும் மேல்நடவடிக்கைக்காக அன்புடன் அனுப்பலாகிறது.

Scanned with OKEN Scanner

இணைப்பு:1

**2023-2024 ஆம் ஆண்டுக்கான சென்னை மாவட்டம் நடத்தும் புதிய விளையாட்டு "டேக்-வான்-டோ" போட்டிக்கான அறிவுரைகள்.**

1. முதல் இரண்டு நாட்கள் (08.01.24 & 09.01.24) மாணவர்களுக்கும், அடுத்த இரண்டு நாட்கள் (10.01.24 & 11.01.24) மாணவிகளுக்கும் போட்டி நடைபெறும்.
2. மாணவர்களுக்கான எடை சரிபார்ப்பு 07.01.24 காலை 10.00 முதல் இரவு 09.00 மணி வரை நடைபெறும்.மாணவிகளுக்கான எடை சரிபார்ப்பு 09.01.24 காலை 10.00 முதல் இரவு 09.00 மணி வரை நடைபெறும்.
3. அணி மேலாளர்கள் தங்கள் மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட அறையில் விளையாட்டு வீர்ர், வீராங்கனைகளுடன் மட்டுமே தங்குதல் வேண்டும். அணி மேலாளர் தவிர வேறு யாரும் உடன் தங்கவோ, உணவு அருந்தவோ அனுமதி இல்லை.
4. மாணவர்களுக்கு 07.01.24 இரவு முதல் உணவு வழங்கப்படும். மாணவிகளுக்கு 09.01.24 இரவு முதல் உணவு வழங்கப்படும்.
5. மாணவர்கள் அணி மேலாளர் கூட்டம் 07.01.24 அன்று மாலை 6.00 மணிக்கும், மாணவிகளின் அணி மேலாளர் கூட்டம் 09.01.24 அன்று மாலை 6.00 மணிக்கும் போட்டி நடைபெறும், செம்மஞ்சேரி, ஜேப்பியார் பல்கலைக்கழக அரங்கில் நடைபெறும்.
6. அனைத்து போட்டியாளர்களும் தங்களின் பள்ளி நகலை (நுழைவுப்படிவம், தனி நபர் புகைப்பட அடையாளப்படிவம்) போட்டி முடியும்வரை உடன் வைத்திருத்தல் கட்டாயம் அவசியம். கேட்கும் போது காண்பிக்கவேண்டும்.
7. மாவட்ட உடற்கல்வி ஆய்வாளரால் அனுமதி பெற்று வரும் <u>உடற்கல்வி இயக்குநர்/உடற்கல்வி ஆசிரியர்</u> மட்டுமே அணி மேலாளராக பணியாற்ற அனுமதிக்கப்படுவர். பயிற்சியாளர்கள் யாரேனும் போட்டியில் இடையூறு செய்தால், போட்டியாளர் கண்டிப்பாக உடனே போட்டியிலிருந்து நீக்கம் செய்யப்படுவார்.
8. பெண் போட்டியாளருடன் அணி மேலாளராக பெண் உடற்கல்வி இயக்குநர்/உடற்கல்வி ஆசிரியரும், ஆண் போட்டியாளருடன் அணி மேலாளராக ஆண் உடற்கல்வி இயக்குநர்/உடற்கல்வி ஆசிரியரும் மட்டுமே அவசியம் வர வேண்டும். <u>(அனைத்து மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர்களும் இதனை அவசியம் பின்பற்றிட வேண்டுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்).</u>

Scanned with OKEN Scanner

9. மாணவர்கள் 09.01.24 இரவு எக்காரணம் கொண்டும் தங்க அனுமதி இல்லை. ஏனெனில், மாணவிகள் அதே இடத்தில் தங்கவேண்டிய சூழல் உள்ளது.

10. அணி மேலாளர்கள் மட்டுமே, ஆட்சேபம் ஏற்பட்டால், மறுப்புக்கட்டணம் செலுத்தி ஆட்சேபணைக் கடிதம் தர தகுதியுடையவர். ஆட்சேபனை தெரிவிக்கும்போது ரூபாய் 1000/- பணம் கட்டுதல் அவசியம். போட்டி முடியும் முன் ஆட்சேபனையை தெரிவிக்க வேண்டும். முடிவு எவ்வாறாயினும் மறுப்புக் கட்டணம் திருப்பி அளிக்கப்படமாட்டாது. நடுவரின் தீர்ப்பே இறுதியானது.

11. தங்குமிடத்தில் ரூபாய் 500/- காப்புத்தொகையாக செலுத்தி வெளியேறும்போது பெற்றுக்கொள்ளலாம். அறையை வழங்கும்போது இருந்தவாறு திரும்ப ஒப்படைக்க வேண்டும். சேதம் ஏற்படின் காப்புத்பொகை மீண்டும் தரப்படமாட்டாது. **(பள்ளிக்கல்வித்துறையின் பெருமையையும் மற்றும் மாணவர்களின் மாண்பையும் காத்து உதவிடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.)** இவ்வளாகம் நமது பள்ளிக்கல்வித்துறைக்கு உதவியாக ஜேப்பியார் பல்கலைக்கழக நிர்வாகத்தினர் மகிழ்வுடன் வழங்கியுள்ளனர் என்பதை அனைவரும் நினைவில் கொள்ள வேண்டுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

12. போட்டியாளர்கள் தங்களுக்கான விளையாட்டு உபகரணங்களை தாங்களே உடன் கொண்டுவருதல் மிக அவசியம். தகுந்த உபகரணம் இல்லாத போட்டியாளர்களை போட்டியில் பங்குபெற அனுமதிக்க இயலாது.

13. காலை உணவு 8.30 மணி முதல் 9.30 மணி வரையும், மதிய உணவு 12.30.மணி முதல் 1.30 மணி வரையும் மற்றும் இரவு உணவு 8.00 மணி முதல் 9.00 மணி வரையும் வழங்கப்படும்.

14. குளிர் காலமாக இருப்பதால் போட்டியாளர்கள் தங்களுக்குத் தேவையான உடைமைகளை தாங்களே கொண்டுவருதல் அவசியம்.

<u>இணைப்பு: 2 பிற மாவட்டங்களில் இருந்து டேக்வான்டோ போட்டிக்கு நடுவர்களாக நியமிக்கப்பட்டுள்ள ஆசிரியர்கள் பெயர் பட்டியல்</u>

| வ.எண் | ஆசிரியர் பெயர் | பணியிலுள்ள மாவட்டம் |
|---|---|---|
| 1 | திரு. சந்திரமோகன், உ.க.ஆ, மாநகராட்சி பாண்டியன் நெடுஞ்செழியன் மே.நி.பள்ளி, | மதுரை |
| 2 | திரு.இளவரசன், உ.க.ஆ.,அ.உ.நி.பள்ளி. நாகமங்கலம். | அரியலூர் |

Scanned with OKEN Scanner

இணைப்பு:3 பொறுப்பாசிரியர்கள் விபரம்

| வ.எண் | பாலினம் | பொறுப்பாசிரியர் பெயர், கைபேசி எண். |
|---|---|---|
| 1 | மாணவர்கள் | கார்த்திக், உ. க.ஆ, 88389 07254 |
| 2 | | கருணாநிதி, உ. க.ஆ, 94442 57214 |
| 3 | மாணவிகள் | செல்வி. பவித்ரா, 63813 22533 |
| 4 | | திருமதி.சுமதி, உ. க.ஆ, 89392 23088 |

இணைப்பு : 4 பேருந்து வழித்தட விபரம்.

| பேருந்து வழித்தடம் | பேருந்து எண் |
|---|---|
| கோயம்பேடு -ஜேப்பியார் | 570 |
| தாம்பரம்- சோழிங்கநல்லூர்-ஜேப்பியர் | 515 |
| சென்ட்ரல்-பாரிமுனை-ஜேப்பியார் | 22 H |

Scanned with OKEN Scanner